மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை எதும் இல்லை.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: துணைத்தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 36/1975) திருப்பியனுப்பப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 36/1975) திருப்பியனுப்பப் பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 5-50)

(6) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி (மேல்வரி) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1975).

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி (மேல் வரி) திருத்த சட்ட முன்வடிவு @(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச்சட்டத்தில் திருத்தம் ஒன்றைச் செய்ததன் வாயிலாக, மாநிலங்களிடையே நிகழும் தொழில்

@ 200-201 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

வணிகம் அல்லது வாணிகத்தில் மிகவும் முக்கியமாக அறிவிக்கப்பட்ட பொருட்களுக்கு அச்சட்டத்தில் 15-வது பிரிவில் உள்ள வரம்பாக வரையறுக்கப்பட்டுள்ள வரி விதிப்பை 3 சதவீதத்திலிருந்து 4 சத வீதமாக 1—7—1975 முதல் இந்திய அரசு உயர்த்தியிருக்கிறது. மாநிலங்களுக்கிடையே நிகழும் அறிவிக்கப்பட்ட பொருட்களின் விற்பனைகள் மீது உள்ளூர் விற்பனை வரியை 1—7—1975 முதல் 4 சதவீதமாக உயர்த்த இதனுல் மாநில அரசுக்கு இயன்றது. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம் இரண்டாவது விவர அட்டவணை நாலாவது இனத்தின் கீழ் வரும் "இரும்பு உருக்கு"-ன் மீது விதிக்கப் படும் உள்ளூர் விற்பனை வரியை 1—7—1975 முதல் 3 சதவீதத் திலிருந்து 4 சதவீதமாக உயர்த்தவும் மற்ற அறிவிக்கப்பட்ட பொருட் களுக்கு தற்சமயம் வரியை அதிகரிக்கத் தேவையில்லையெனவும் மாநில அரசு முடிவு செய்தது.

இந்தச் சட்ட முன்வடிவை ஏற்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி (மேல் வரி) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1975) பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை எதுமில்லை.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு, கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி (மேல் வரி) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1975) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி (மேல் வரி) திருத்தச்

சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1975) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை, மீண்டும் 1975-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள், 27-ம் நாள், திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 5-52)

(6) அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

211. Notification issued with G.O. Ms. No. 184, Prohibition and Excise, dated 6th June 1975 in regard to amendments to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937.)]

212. Notification issued with G.O. Ms. No. 742, Rural Development and Local Administration, dated 29th April 1975 in regard to deletion from the approved list of parks in the area of Vellore Municipality for the construction of waiting shed for the Bus stand, etc. [Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959).]

213. Notification issued with G.O. Ms. No. 772, Rural Development and Local Administration, dated 3rd May 1975 in regard to deletion of a portion from the approved list of parks in Coonoor Municipality. [Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959).]

214. Notification issued with G.O. Ms. No. 54, Home, dated 9th January 1975 in regard to exemption of the Mobile Crane bearing Registration No. MDN 7590 belonging to St. Josephs Industrial School, Ootacamund from payment of tax. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 18 of 1974).]